சைவபரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : 1889 விரோதி ஞு ஆவணி மீ 28-ஆம் உ

சிவமயம்

இலங்கையில் செய்தித் தாளாகப்
பதிவுபெற்றது, பதிவு இல - 2

# இந்து சாதனம்

பிரதி விலை
ரூபா. 1-00


Hindu Organ

புத் 99, 100] யாழ்ப்பாணம் :- விபவ ஞு ஆவணி மீ ( 19 - 08 - 1988 இல - 7 ]

# அன்று நாடாண்டவர் அமைத்த நல்லூர்

## ஆறுமுகன் அருள் விளைந்த அரசர் திருப்பணி

**ஆறு நூறு ஆண்டுகளுக்கு முன் யாழ் நாட்டை ஆட்சி புரிந்த அரசர்களின் அரிய திருத் தொண்டாக அமைந்து வந்து இன்று மிகுவனப் புடன் மிளிர்வது நல்லூர்க் கந்தன் கோயில்.**



செண்பகப் பெருமாள் என்ற சிறந்த செந்தமிழ் அறிஞனாக விளங்கிய அரசனே, இந்த ஆலயத்தைக் கட்டுவித்தான் என்று வரலாறு கூறுகின்றது. அந்த அரசன் மாவை ஆதீனத்துச் சின்னமனத்துளார் என்ற. மறையினர் திலகத்தின் விருந்து அருந்தும் பாக்கியம பெற்றவர் என்றும் சரித்திரகாரர் குறிப்பிடுவதிலிருந்து நல்லூர்க் கந்தன் கோயில் தாபிக்கப்படுமுன் மாவைக் கந்தன் கோயில் அமைக்கப்பெற்ற தென்பது தெளிவாகின்றது.

மாவை நல்லூர் கந்தவனக் கடவை செல்லச் சந்நிதி என்ற வரிசையிலே கலியுகவரதன் நாலு பக்கங்களிலும் காக்கும் அரணாக அமைந்து முன்

( வளர்ச்சி 4 ஆம் பக்கம் )

### கொடிஏறத்தடைப்பட்ட கோயிலுக்குக் கொடிக்கவி

○●○

செல்வச் சந்நிதியில் வல்லினத்தார் தொல்லையாலே திருவிழாவும் இல்லைக் கொடிஏற்றமும் இல்லாமல் இரண்டு ஆண்டுகள் இருண் மயமாயிருந்தது.

இவ்வாண்டிலே தெய்வாதீனம் நிகழ்த்திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

உமாபதிசிவம் உரைத்த கொடிக்கவியை இங்குபாடுவது பொருத்தமாகும்.

ஒரு பொல்லாப்புமில்லை-- எல்லாஞ்சரி - யோகர்சுவாமிகள் சொன்ன சுலோகம் தத்துவக்கருத்துச் செறிவானது.

ஆனல் இந்நாட்டில் எல்லாஞ்சரி - ஒரு பொல்லாப் புமில்லை என்கிறர்களே

கூத்துக்குட்கோமாளி என்பார்கள்! உண்மையை ஒதுக்க முடியாது. ஊர் அறியும் உள்ள சிரை.

### அன்னதானக் கந்தன் ஆலயத்தில்

## ஆண்டுப் பெருவிழா

### செல்வச் சந்நிதியில் மீண்டும் தெய்வச் சீர்

அசம்பா விதங்களினல் மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்ட தலங்களிலே செல்வச் சந்நிதியும் ஒன்று ஆனல் மறுபடியும் இங்கே மாவிழாக்கள் அமையத் திருவருள் பாலிக்கவே பழைய தெய்விகச் சிறப்பு மறுபடியும் திகழத் தொடங்கி விட்டது.

மடங்களுக்கும் மாகேசுர பூசைகளுக்கும் காவடிப் பொலிவுக்கும் இயற் கைவனப்புக்கும் புகழ் படைத்த சந்நிதி, சைவ மக்களுக்கு ஒரு பொன் நிதி.

வெள்ளி ஆடித் திங்கள் 28-ம் நாள் ஆரம்பமானது கொடி ஏற்றத்துடன் சந்நிதித் திருவிழாக் காலம் ஆவணித் திங்கள் 10-ம் நாள் (26-8-88) தேர் உலா 11-ம் நாள் தீர்த்த விழா நிகழும்.

## ஆவணி மூலம் - அன்னை சிவலிங்கக் கோலம்

★ " இறை — ஒளி" ★



திருவிழாக்காலங்களிலே ஆலயங்களிற் கூடுகின்றவர்கள் அந்நேரத்திலே இயல்பாக இறை வழிபாடு செய்வர்; ஆனல் இவர்கள் எல்லோரும் பத்திமயமானவர்களா என்பது கேள்விக்கிடமாகும்.

இடையருது இறைநினைவாக அரன் பணியில் நின்று என்புருக ஏத்தி வழிபடும் இயல்பினருக்குப் பத்தி உண்டாகிப் பரந்து வளரும். இப்பேறுடையார்மாட்டு ஆணவம் கன்மம் மாயை குறி வைக்கமாட்டா விபரீதம் விளைவாகாது.

( வளர்ச்சி 2 ஆம் பக்கம் )

### துர்க்கை கொடி ஏற்றம் சோதி மயம்

ஆடி பப்பத்தோராம் நாள் திங்கட்கிழமை பூர்வபக்கத்திருதியைத்திதியில் உத்தரநட்சத்திர உத்தம வேளையில் துர்க்கை அம்பாள் திருக்கோயிற் கொடி முற் பகல் 11 மணிககு பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வீதிகள் உள்ளும் புறம்பும் பரவி நிற்க இசை இன்பம் வானில் எழுந்து வசந்தமாகபரவசிவாசாரியர்கள் மந்திரகோஷம் ஒலிக்க ஆதீனப் பிரதம சிவாசாரியர்சிவாகம கிரியாஞான வித்துவ மணிசிவஸ்ரீ சுந்தரேசக்குருக்கள் அவர்களால் அயரா அன்புடன் ஆநந்தமாக ஏற்றிவைக்கப்பட்டது. பூமாரிப் பொலிவு இளநீர், பால், தயிர், பழஇரசம், கரும்பு, விபூதி, சந்தனம, குங்குமம் இவற்றால் அபிடேக அர்ச்சனைகள் எல்லாவற்றையும ஒரே இன்பமயமாக்கின.

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அனைத்தையும் நெறிப்படுத்திய வண்ணம் நின்றனர். எல்லாம் ஒழுங்காயமைந்தன.

தொண்டு நெறிபூண்டுதெல்லித்—
துர்க்கை திருத்தலத்திற்
பண்டுமுறைப் பான்மையிற்—
பத்திமை - கொண்டுநறும்
பூந்தொடையும் ஆடைமணிப்
பூண்பொலிவும் தீபகதிர்
ஆந்தொடர்பும் விண்ணேர் —
அமைப்பு

### திருமுறை ஓதுவதில்

## ஒரு நெறிச் சாதனை

### துர்க்கா தலத்தில் பூர்த்தி நிகழ்ச்சி

ஆசாரசீலராய் அக்குமணி அணிந்தவராய் வெண்ணீற்றொளி விளங்குபவராய் அரன்பால் அயரா அன்புடையவராய் ஓர்குழாம் கூடி ஒழுங்காக நேர நியமத்துடன் திருமுறை ஓதும் பெருநெறிதெல்லித் துர்க்காதேவித் திருக்கோயிலில் பலநாட்களாக நிகழ்ந்து ஆடித்திங்கள் 23ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருமுறை ஊர்வலத்துடன் தொடங்கி பூசைவழிபாட்டின் பின் ஓதுவார்களுக்கு உரிய கௌரவ மளிக்கப்பட்டு மகேசுர பூசையுடன் நிறைவெய்தியது.

துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி ஓதுவார்களின் திருத்தொண்டு நாட்டு நலனுக்கான ஒரு எழுச்சி என்றுவாழ்த்தினர்.

செங்கோல் அரசு செலுத்திய பெருவேந்தர்கள் அக்காலத்திலே திருவூர்கடோறும் திருமுறைப் பதிகங்களை ஓதிவரச் செய்தனர் என்று பழைய வரலாறு கூறுகின்றது. அந்தநிலை இந்தக் காலத்தில் துர்க்காதேவஸ்தானம் போன்ற தெய்வீகப் பதிகளிலே நடைபெற இந்தத் திருமுறைப் பூர்த்தி விழா ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது.

**ஆடிப்பூரம் ஆலயத்தில்**

பூரணிக்குரிய பூரநட்சத்திரத்

வளர்ச்சி 4 ம பக்கம்

★ துட்டரைத் துரந்திச் சுகந் தரத் துர்க்கை எழுகின்ருள் ★



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
விபவ ஸூ ஆவணி மீ
( 19 – 08 – 1988 )

## வாழ வேண்டும்; அதற்கு வழி தேடவேண்டும்

அல்லற்படுகின்றோம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் விமோசனம் விளையுமா ?

நாடு முழுவதுமே கேடு உற்றதென்று எங்கள் ஆற்ருமையைக் காட்டுவது ஏதும் பயனளிக்குமா ?

இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஜப்பான் தேசத்திலே அணுக்குண்டுத் தாக்குதலினுற் கோடிக்கணக்கான மக்கள் உயிர் இழந்தார்கள். ஒரு பிரதேசம் அப்படியே அழிந்துவிட்டது. இவ்வளவு இன்னற்பட்ட ஜப்பானியர் இன்று அனைத்துலகிலும் பொருளாதார விருத்தியில் முன்னணியில் நிற்கின்ருர்கள் என்ருல் இது திருவிளையாடல் அல்ல. முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழியின் செயற்பாடுதான்.

இந்நாட்டிலே இன்றைய நிலையில் எல்லாம் துன்பமயம் என்பது உண்மை. அதற்காக நாம் வாளாவிருப்பதா

உழவுக்கும் தொழிலுக்கும் வழியை நாமே வகுத்துக் கொள்ளுதல் வேண்டும். வீட்டுத்தோட்டங்களை விவசாயப்பண்ணைகள் ஆக்கலாம். முற்றத்திற்பட்டடை வைத்து ஏதாவது ஒரு தொழிலைச் செய்யலாம் உழைப்பினுல் உடம்பு களைப்புற்ருலும் உயிர்ஊக்கம் அளிக்கும் உள்ளத்திலே உவகையுண்டாகும். உண்டாகவே மனம் அமைதியுறும். அந்நியர் எம்க்கு மன அமைதி ஆக்கத் தேவையில்லை. எனவே வாழவழி தேட வாய்ப்பு உண்டாகும். மெல்ல வளரும் எங்கள் வல்லமை, வளர வளர மிளிரும் எங்கள் இறைமை.

நல்லூரானைச்சொல்லித் துதிப்போம். எல்லாம் நல்லாய் அமையும்.

"சும்மா இருக்கச் சோருமோ சோமா வாடா காலாட்ட"
என்று யோகர் சுவாமிகள் சொல்வதுண்டு. — காலாட்டுதல் ஒருவகைத் தொழில். காலால் இயக்குவது.

# ஆவணி மூலம் - அன்னை சிவலிங்கக்கோலம்

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சி )

துர்க்காதேவி தூய தலத்திலே அன்னை சிவலிங்கத்துடன் மேவி ஆவணி மூல நாளில் அளிக்கும் ஆநந்தக் காட்சி கண்ணுக்கடங்காக்கவினுடைத்து. காணக் காணக் கண்கள் இமை கொட்டாது கருத்தில் ஒருமித்து நிற்கும் பேறு அமையும்.

இக் காட்சியினைச் சமயானுட்டான முதற் படியாம் சரியையில் நிற்பவர்கள் கண்டு களிப்பது ஒரு வகை. சிவன் வெளித்தோன்ருத நிலையிற் சிவ வடிவை உள்ளத்திற் கொள்ளுதல் ஆகும்.

கிரியைப் படியில் இருப்பவர்கள் மந்திரங்கள் வழியாக வழிபடும் வகையிலே இறைஉருவைக் கட்டையைக் கடைய உண்டாகும் அக்கினி ஒளிபோல அநுபவிப்பர்.

யோக மார்க்கத்தினர் ஆவின்பால் சுரக்கும் தன்மையாக மந்திர வழிபாட்டினுலே சிவதோற்றத்தைத் தேறிக் கொள்ளும் கதி உறுவர்.

கருணைநிதியாம் சிவபெருமானின் அருளால் புனிற்று ஆவின் முலைக்காம்பின்கண் சொரியும் போலச் சிவலிங்க தரிசனம் பெறுவர்.

எனவே கணம் பித்தம் கணம் வாதம் என்றவாறு குணம் சித்தம் இல்லா எம் போன்றவர்களும் பக்திப் பயற்சி பண்ணிச் சித்தியடையலாம்.



## சிவலிங்க தியானம்

சிவலிங்க சிவசக்தி ஒருங்கமைந்த தவக்காட்சி காண நோன்பிருந்வர்கள் அநுபவிக்கும் மெய்ப்பாடு, உலகியலிலே திருக்கோயிலின்கண் வழிபடும் அடியார்கள் அப்பொழுது தம்மை மறந்து தெய்வ தரிசனத்தை ஆநந்தவுணர்ச்சியுடன் கண்டு கொள்வதாய் அமையும்.

பரநடன தரிசன நியமத்திலமைந்திருக்கும் மெய்யடியார்கள் எய்தும் மெய்ப்பாடு, சிவலிங்க சிவசக்தி அருட்காட்சியை, மெய்கண்டசாத்திரப் பயிற்சியுடையார் நோக்கும் பொழுது, ஞாபகத்தில் எழும்.

இந்த மெய்ப்பாட்டைத் திருமந்திரத்தில்,

"புளிக்கண் டவர்குப் புனலூறு மாபோற்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள் ஆநந்தத் தமுதூறும் உள்ளத்தே"

என்ற பாட்டில் அறியலாம்.

மும்மலங்ளின் ஆதிக்கத்திலிருந்து சிவனருளாற் பிரிந்தெழுந்து தூய சிவலிங்க தரிசனம் காண்பது பேறென்று எங்கள் உள்ளத்திற் படியுமாறு விளங்குவது ஆவணி மூல நாளில் அரனும் ஆற்றலும் அமைந்த சிவலிங்கத் தரிசனவிழா.

கதிரவன், கதிர்ஒளி கண் இம் மூன்றும் ஒன்ருேடொன்று இயையும் தன்மையால் இன்றியமையாதவை. அத் தன்மையாற் பிரபஞ்சப் பொருள் ஆன்மாவுக்கு வெளியாகின்றது. காட்டுபவர் கடவுள், காண்பவரும் அவரே. இங்கே காட்சி என்ற ஒரு நிகழ்ச்சி பொருள் பொதிந்ததாகும்.

மெய்ப் பொருள் காண்பது அறிவு, திருவிழாக் காலங்களிலே ஆங்கு தோன்றும் விழாக் கோலங்களின் காட்சி எங்கள் அயரா அன்பினுல் எங்கள் அறிவைச் செறிவுறச் செய்கிறது. எனவே மெய்ப் பொருளைக் காண முடிகின்றது பொய்ப் பொருள் நினைவு போய்விடுகின்றது. சிற்சக்தியின் ஆற்றல் இருந்தவாறு.

அருள் ஊறி ஆருகப் பெருகும் தெல்லியூர் துர்க்கா தேவி ஆலயத்திலே ஆண்டு தோறும் ஆவணி ஓணம் நிலவும் நாள் ஈருக ஆறிரு நாட்கள் மாவிழாக்கள் நிகழ்வது வழமை



சிவலிங்க துர்க்கை எழுந்தருளும் சிறப்பு

ஒன்பதாம் விழா ஆவணி மூலம் மேவு நாளில் அமையும். ஆண்டு விழாக்கள் ஆரம்பமான காலத்திலே ஆவணி மூல நாளின் அதிவிசேடத்தை ஒன்பதாம் விழா குறிக்கும் வகையில் அமையவில்லை. வழமையான வளமை செறிவது மட்டுமே. ஆறுண்டுகளுக்கு முன் இக் கோயிலின் சிவர்சாரியபீடத் தலைவராக வைதிக சமய வழிபாடும் கிரியா கீர்த்தியும் பொலியும் தென்மராட்சியில் உயர்ந்த பண்புடைய உசன் பேரூரிலே கலியுகவரதன் கந்தசுவாமி கொலுவீற்றிருக்கும் ஆலயத்துக்குரிய அந்தணர்குழாமில் அமைந்துள்ள சிவாகம சீலர் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் அவர்கள் துர்க்கைத் தொண்டாகத்தூய பணி ஆற்றத் திருவருள் பொருந்தியது, அந்நிமித்தமாக ஒன்பதாம் விழாவுக்கும் ஒரு பொலிவுமேலும் அமைந்தது.

## சிவ தரிசனமும் சித்தாந்தமும்

ஆவணி மூல நாளில் அமையும் விழா வெனற பான்மையைத் திருக்கோலத்திலே சிறப்பிக்கும் சிந்தனை சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்களுக்குத் தெற்றெனப் புலப்பட்டது. சிவாசாரியர் இவர்கள் எல்லாக் கிரியைகளையும் அவற்றின் அர்த்தத்தை அடியார்கள் ஓரளவுக்கு அறிந்து கொள்ளும் வகையிலே ஒழுங்காக அழகாக இயற்றுவதில் எண்ணமுடையவராய் விளங்குவதைத் துர்க்காதேவி ஆலய அடியார்கள் நன்கறிவர்

ஆவணி மூல நாள் ஆகும் திருவிழாத் தேவலோகக் காட்சியைத் திருட்டாந்தமாகக் காட்டும் வகையில் அமைய வைத்தனர் அந்தணர் திகலமாம் குருக்கள் அவர்கள். விரித்த வசந்த மன்றினில் வசந்தம் வீசும். கையிலையங்கிரியனேர் சாரலில் நிற்கின்ருேமோ என்று அடியார்கள் அகம் மகிழ்வர், சிவலிங்கம் மருவிய சிவசக்தி எழுந்தருளும் நவநயக் காட்சியாம் செய் தவத்தாலாவதால் மிகு மாட்சியுடைத்தாகும் என்பர்.

நாகதம்பிரான் வாகனத்தின் அமைப்பில் சிவலிங்க – சிவசக்தித் திருக்காட்சி பரநாதம் பரவிந்து என்ற பான்மையில் இச்சாஞானக் கிரியைகளுகுரியதாய் - தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருந் சத்தி பின்னமிலான் எங்கள் பிரான் தருகின்ருர்.

என்ற உமாபதிசிவத்தின் உரைக்கமைய எல்லாம் ஏகமாய் சொல்லுக்கப்பாற்பட்ட தோற்றமாய் எங்கள் உள்ளங்களை உணர்விக்கும் ஊக்குவிக்கும் ஒளி செய்யும்.

இனி இந்த ஆவணி மூலம் சிவம் சக்தி சிவலிங்கம் என்று இந் நிகழ்ச்சியின் கண் எங்கள் எண்ணத்திற் குடி கொள்வனவற்றைச் சற்றுச் சிந்திப்போம்.

ஆவணி - தஷுணயனம் - வருஷருது - கார்காலம் - சிராவண - பாத்திரபத சிங்கமாதம் என்று பஞ்சாங்கக் கணிதர் பகுத்துச் சொல்வர். சிங்க இராசித் தொடர்புடைய இவ்வேளையிலே சிங்கத்தில் வீற்றிருக்கும் சிவசக்திக்குத் திருவிழாநிகழ்வது பங்கயம் மலர அங்களக் கதிரவன் உதிப்பது சாலும்.

அழற்சிக்குப் பின் குளிர்ச்சியென்ருங்கு தஷுணயனம் எழுதல் என்க.

மூலம்:- அச்சுவினி ஆதியாம் இருபத்தேழு நாட்களிற் பத்தொன்பதாவதாய்த் தனு இராசியிலே அமைவது.

தலைமை காரணம் வேர் என்ற பொருள் உண்டு- சிலை என்றும் விளங்குவது.

தனு சிலையைக் குறிப்பது ஆவணி மூலத்தன்று துர்க்கா தேவி வேட்டை விழாவும் நிகழ்வது குறிப்பிடத்தக்கது. தனுவுடன் ஆணவத்தசுரனை சிங்கத்திலமர்ந்து சிவசக்தி துர்க்கை ஒழிப்பது என்ற பாவனை யிங்கும் பொருந்தும் மெய்கண்ட சாத்திரத்திற் கைவந்த பொய்யில் புலவர்கள் ஆய்ந்துரைத்த பொருளிற் பொருத்தமானதை யீண்டு யாம் புரிந்தவாறு சொல்லும்.

திருப் பெருந்துறைக் குருந்த மரத்தடியில் எழுந்த குரவர் கரந்திகழ்ந்த சிவஞானபோதத் திருநெறிய நூலின்கண் ஒன்பதாம், பத்தாம், பதினொராம் பன்னிரண்டாம் சூத்திரங்களிலே சிவதரிசனம் சிவலிங்கம் சிவாலயம் என்ற செம் பொருள் பற்றிய அருங் கருத்துக்களை இந்தச் சிவலிங்க

( வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

ஐங்கரன் வழிகாட்டுந்தேரில் அமைய

# ஐந்து இரதங்கள்

## மாவைக்கந்தன் மாபெரும்பவனிஉலா

ஆயிரக்கணக்கில் அல்ல. பத்தாயிரக்கணக்கில் அடியார்கள் வியாழக் கிழமை (11-8-88) காலை தொடக்கம் மாலை வரைக்கும் மாவைக் கந்தன் கோயிலிற் குவிந்த வண்ணமாக இருந்தனர். வடகுடாநாடு முழுவதுமே மாவையில் அமைந்து விட்டதாக இருந்தது மக்கள் சமுத்திரக் காட்சி.

காவடி யாத்திரைக்குக் கணக்கேயில்லை அந்தரத்தில் அடியார் காவடி எடுக்கும் கவர்ச்சி மிக்க காட்சி வேறு.

சில நாட்களாகக் கோடை வெப்பம் கொடுமையாக விருந்த தேர்த் திருவிழா நாளில் மழை விளம் குளிர்ச்சியை நிலத்தில் மட்டுமன்றிப் பக்தர்கள் உள்ளத்திலும் வழங்கியது.

மேளவாத்திய நாதசுர, கான வெழுச்சி என்றுமில்லாதவாறு இசை இலய வித்துவ மேதைகளால் வெகு இரமியமாகப் பெற்றது. தேர் உலாவுக்கும் பஞ்சமூர்த்திகள் நடன பவனிக்கும் சிருங்தார அலங்காரத்தை அமைந்தது.

அர்ச்சனைகள் ஒரே தொடர்ச்சியாக அடியார்கள் வரிசையாக நின்ற கொடிகள்பல. அந்தண உத்தமர்கள் நல்ல ஆதரவுடன் அடியார்களின் அர்ச்சனைகளை நடத்தி விபூதிப் பிரசாதம் வழங்கிய வண்ணம் இருந்தனர்.

விழாக் கிரிகைகளுக்குத் தலைமை தாங்கிய குருக்கள் இந்த விசேட வைபவத்தில் விசேடமாக விதிமுறை கிரியைகளை மிளிர வைத்தனர்.

ஆதின கர்த்த மகாராஜா ஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்களின் நிருவாக நியம ஒழுங்கு நெறி மிகமிகச் சிறந்து பொலிந்தது.

✕

# செல்லப்பா சுவாமி சுற்றித் திரிந்த திருத்தேரடி

## நல்லூரில் வேல்வல்லோன் நகர்வலக் காட்சி

சென்ற புதன்கிழமை சேவற்கொடிச் சிவ்சண்முகனின் கொடிஏற்றம் நல்லூரில் நிகழ்ந்தது. சொல்லவும் வேண்டுமோ ஆசைதீர அடியார்கள் கூடினுர்கள் கைகூப்பியவண்ணம் நின்றனர்.



மணி மஞ்சத்திருவிழா வருகிற வெள்ளிக்கிழமை (26-8-88) கார்த்திகைக் குமரன்விழா அடுத்த வெள்ளிக்கிழமை (2-9-88) அடுத்த திங்கள் (5-9-88) சந்தான கோபாலர் விழா கைலாச வாகனம் பின் வரும் வியாழன் 8-9-88க்கு வழிவகுக்கும்.

சப்பறவிழா கற்பூரக்காட்சி வெள்ளிக்கிழமை 9-9-88 எம்பெருமான் இரதஉலா. விண்ணவரும் கண் வைக்கும் திருக்கோல வீதிவலம் அடுத்தநாள் சனிக்கிழமை 10-9-88 தீர்த்தநிகழ்ச்சி

பக்தர்கள் படையெடுத்த வண்ணம் பஜனை செய்தவாறு ஆயிரம் ஆயிரமாக தமிழகத்தலைநகர் நல்லூரில் நாலாபக்கங்களிலும் சூழ்ந்து வடிவேலா, காவடி வேலா, அடியாரைக் காக்க அசைந்துவாஎன்றுஆநந்த மழலை பாடி வணங்குவதைப் பார்த்தாலே பரகதி

# சிவம்பெருக்கும்பிள்ளையார் திருவவதாரம்

## சேக்கிழார் செந்தமிழிற் சீர் சொல் அலங்காரம்

திருத் தொண்டர் மாக்கதை இன்றமிழிற் சொல்ல மூத்த பிள்ளையாரின் மேன்மை அருளாகப் பெற்ற சேக்கிழார்குரிசில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் புராணம் எடுத்துரைக்கும் பெற்றி முற்றிலும் இன்பமயமே.

புகலித் திருத்தொண்டர் எற்றுக்குலகில் உதித்தார் என்று விளங்கும் வகையிலே வேதநெறி தழைத்தோங்குதலும் மிகு சைவத்துறை விளங்குதலுமே எனத் தொடங்குகிறுர் சேக்கிழார் பெருமான். அந்த அவதாரம் பூதபரம்பரையைப் பொலிய வைக்கும் தன்மையினுல் கவுணியக் குழந்தையின் ஊராம கழுமலம் முதியது, ஆங்கு அருமறை முறையே ஓதும் அந்தணர் ஒலி ஓங்குதலும் ஓர் அணி இன்னும மேலாக.

உளங்கொள் மறை வேதியர்
தமோமதூ மத்திரவும்
கிளர்ந்திரு நீற்றெளியிற்
கெழுமிய நண் பகலுமலர்ந்
தளந்தறியாப் பல்லூழி
யாற்றுதலா லகவிடத்து
விளங்கியவம் மூதூர்க்கு
வேறிரவும் பகலுமிகை

அவ்வூர் மரங்களுமே ஆகுதி வேட்குந் தகையன. ஆங்குள மாடங்களில் வடமீன் அனைய கற்பின் பொற்புடைய மனை வாழ்க்கைக் குல மகளிர் வளம் பொலியும். சிறுதேர் ஊர்ந்து விளையாடுவர் மறைச்சிறுர், வேதமோதும் இடமெலாம் கலை முழக்கம், முனிவர் குழாம் இன்னொரு பாங்கில்.

இத்தகைய சக்திவாய்ந்த நல்லூருக்கு நாமங்கள் பன்னிரண்டுள வெனநவில்வர் சேக்கிழார் நாவலர்.

பிரமபுரம், வேணுபுரம், புகலி, திருத்தோணிபுரம், பூந்தராய், சிரபுரம் புறவம் சண்பை நகர் காழி கழுமலம் இப்பதியில் எப்பொழுதும் முப்பொருள் உண்மை அறிந்து மறையோதும் அந்தணர் குடி முதல்வர், கவுணியர் கோத்திரம் விளங்கத் திருநெறி வழி வந்த சிவபாதவிருதயர் உளர் என்றுல் அதற்கோர் காரணம் உண்டு இறைவி வாழ தவஞ் செய்து மகவொன்றினைப் பெற்றெடுப்பார் என்பதே இறைதன் இன்னடிகள் இதயத்தில் அமையப் பெற்றவர் சிவபாதவிருதயர்

### மனை அற மாட்சி

அவதாரபுருடர் ஒருவருக்குத் தந்தையும் தாயுமாம் இரு குரவர்களும அத்தகைப் பெருமைக் குரியவராக மரபு மாண்பு பெற்றிருத்தல் வேண்டு மென்பதை அநுமானத்தால் அறியலாம்.

மாமறைக் குலமொன்றின் முதல்வர், அம்மரபு தொடர்ந்து விளங்க வைக்கும் சீலமுடையவர். இது தாதை வழி எழிலாம்.

மற்றைய மரபு, இடப்பட்ட நாமமே காரணப் பெயராக அமையத்தக்க பெற்றியுடைய அந்தண குலத்துதித்த பகவதியார் தாயாராகினர்.

இருமரபும் சைவ நெறியாற் றூய்மை பெறும் இம மனை வாழ்க்கையில் விளங்கிய சீலங்களில் ஒன்று சிவனன்றி எவனுமில்லை யென்ற திடசித்தம் இன்று வெண்ணீற்றில் அன்பு பணி அக்கோலம் பரவி நிற்றல் என்றுல் வியப்பு மேவுந் தானே.

அன்னையின் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது சொன்னயத்துக்காக எழுந்ததென்றெண்ண வைக்காது. சிவபாத விருதயரும் பகவதியாரும் தெய்வத்தன்மை இயல்பாக அமைந்துள்ளன ராகையாலே பிள்ளையார் முன்னறியவும் பின்னுணரவும் தெய்வமயம் விளங்கிய தெனலாம்.

வளரும்

### நந்தி மணிவிழாவில் எழுந்த

# நயசிந்தனைகள்

பேராசிரியர் சிவஞான சுந்தரம் அவர்களின் மணி விழா நிகழ்ச்சியில் மலர் வெளியிடப்பட்ட பொழுது பேராசியர் க. சிவத்தம்பி அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டனர்.

கலை, சமயம் போன்ற துறைகளிலே பெயர் படைத்தவர்களுக்கு மணி விழா எடுத்தல் போன்று சமூக சேவை புரிவதிலே கீர்த்தி பெறுபவர்களின் மணி விழாவும் நிகழ்த்துதல் விரும்பத்தக்கது என்றுர் பேராசிரியர் சிவத்தம்பி.

மணி விழாப் பெற்ற பேராசிரியர் சிவஞானசுந்தரம் கலை மட்டத்தில் மட்டும் அல்ல சமூக நல சேவையிலும் அரிய தொண்டுகள் புரிந்து வருகின்றனர். எனவே இவ்விழா சமூக நல சேவைக்கும் புகழாரம் சூட்டிய தெனலாம். நாட்டிலே காலத்துக்குக் காலம் நிகழ்வனவே வரலாற்றுக்கும் பொருளாவன. இவற்றைச் சேகரித்துத் தரப் படுத்தி விமர்சனம் செய்யும் தகமை பல்கலைக் கழகத்திற்கே அமையும் பொருந்தும் எனவே யாழ் பல்கலை கழகத்தில் இவ்வாறுன வரலாற்றுக்குரிய நிகழ்ச்சிகளை நிரற்படுத்தித் தரம் செய்து நூலாக வெளியிடுவதற்குரிய பீடம் அமைவது பொருத்தமாயிருக்கும். ✕✕

### நல்லை ஆதீனம் விழா

★●★

2-9-88 வெள்ளிக் கிழமை திருக்கார்த்திகைத் திருவிழா வன்று நல்லை ஆதின ஆண்டு விழா நடைபெறும்.

## ஆவணி மூலம் - அன்னை.....

(2 ஆம் பக்கத்து வளர்ச்சி)

சிங்க துர்க்கை மூலத் திருநாள் வாழ்விலே எழும் எழில்மிகு காட்சியில் அமைக்காதமைய முடியாது.

மதுரை மாநகரிலே ஆவணி மூல வீதி யொன்றுண்டு. இந்நாளின் உந்நதத்தைக் குறிக்கும்.

சிவத்தமிழ்ச்தவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உற்ற திருநீறும் சிவாலயப் பற்றும் தவவேடமும் கற்றவர் ஆசியும்பெற்று வகுக்



"சிவாசாரியக் கிரியாமணி"

சிவஸ்ரீ சோ. இரத்தின. சுந்தரேஸ்வரக் குருக்கள்

கப்பட்ட மானுடப் பிறவி அரன்பணித் தவமென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு துர்க்கா தேவஸ்தான நிர்வாக நெறிய மைக்கச் சால்புநனிவாயப் பெற்றவர் - வேதசிவாகம விதி தவறுது ஆலய பரிபாலனம் செய்யும் ஆற்றல் மிக்குற்றவகையிலே சிவாசாரியர்கள் தங்கள் சிவப் பணி மகிமையால் விசேட சமயிகள் என்பதற்கமைய அவர்களுக்கான முறை வரவேற்கும் தன்மையினுல் இத்திருத்தலத்திலே எல்லாம் இன்பநியமம் தங்கமயம்.

தேவிக்குத் திருவிழாக்கள் செம்மை மேவி ஓங்குவதற்குச் சிவாசாரியர்களுக்கு ஊக்கமும், மதிஆக்கமும், திருநோக்கமும் அளித்தவண்ணம் நிருவாகத் திருவாளர்கள் புடைசூழத் தங்கம்மையார் சிங்கத்திவரும் சிவசத்திக்கு நியமங்கள் யாவும் அமைய அயராது அடியார்கள் கூடுகின்றனர் - துர்க்காபுரம ஜோதி மயமாய் விளங்குகின்றது.

சிவசாரிய பீடத்தலைவர் சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் இரத்தினசபாபதிஐயர் சுந்தரேஸ்வரக் குருக்களின் கிரியா வண்ணமும் வளமும் கிரியாமணி என்ற பட்டத்துக்கு வழிவகுத்தன.

பாரம்பரிய பூசகர் மரபிலுள்ளவர்கள் இன்னமும் இங்கு தேவிப்பணி செய்த வண்ணமிருக்கின்றனர்.

அசிரியர்களிற் பட்டதாரிகள் அல்வாறல்லாதார், பயிற்றப் பட்டவர் எனப் பிரிவுகள் உண்டு. பட்டதாரிகளிலும் பயிற்றப்பட்டோர் உளர்.

அவ்வாறேஇங்கு சிவாசாரியர்களிற் பயிற்றப்பட்டவர்கள் என்ற பண்பு காணப்படுபவர்கள் இருக்கிறுர்கள். ஏனையோர் பயிற்றப்பட்ட பூசகர்கள்.

விக்கிரக அலங்கார சிற்ப விநோத வித்துவப் பெற்றியமைந்த அந்தணர் பாரம்பரிய தொடர்புள்ளவர் இங்குண்டு.

அந்தமில் அன்புள்ள அன்னை துர்க்கை மைந்தர்களிலே துர்க்கா தொண்டில் அமைந்து விளங்குகின்றனர் தெல்லி இந்து இளைஞர் சங்கத்தினர்.

மிகு கருணை துர்க்கைப் பணியில் அக மகிழும் மங்கையர் குழாம் இங்கு விளங்குகின்றது.

( வளர்ச்சி 4 ஆம் பக்கம் )

Hindu Organ

AUGUST (18-8-1988)

## PEACE OF MIND – WE PRAY FOR

All that we can do in this hour of calamity is to pray.

And that prayer is for a little peace of mind.

Along with this prayer let us work for our bread; for work is a form of prayer.

Let us earn our bread and also learn to pray.

Peace of mind can then be gained.

## அன்று நாடாண்டவர் . . . . .

( 1ஆம் பக்கத்து வளர்ச்சி )

வினைப் பயனாக வன்செயல்களின் மத்தியில் மக்கள் சிக்கி கொண்டனர்.

இந்த இன்னலிலிருந்து விடுவிக்கப்பெற அந்தக் கந்தன்தான் வந்தருள வேண்டும்.

வேந்தர் தமக்கும் அஞ்சார், யமன் சண்டைக் கஞ்சார் கந்தன் நன்னூல் அலங்காரம் நூற்றுள் ஒரு கவிதான் கற்றறிந்தவரே என்றபடி அருணகிரி நாதர் ஆறுமுக அடியார் சொன்னதை மீண்டும் இங்கு சொல்வது பொருந்தும்.

கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன் கந்த வேல்முருகா
நதிதனை யன்ன பொய் வாழ்விலன் பாசநரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே

என்று பாடிய பரமபத்தருக்கு கதியுண்டானது.

அல்லற்படும் நாமெல்லோரும் கந்தன் கழல் பாடிக் கசிந் துருகி வரந்தா வென்றுற் றந்திடுவான் வடிவேலன்.

நாவலர்க்குத் தாயகமாம் நல்லூரில் வந்தகந்தன்
பாவலர்க்குப் பண்டிதன்யாழ்ப் பாணத்துக்
- காவலர்க்கோ
ஏவலனும் இறைமிழ்முன் ஈந்தவனும் அஞ்சுவதென்!
சேவலன்மெய் காப்பபான் தெரிந்து.

## சொல்லும் பொருளும் சுவைக்கும்
# நல்லை ஆதீனப் போதனைகள்

### கந்தனை வழிபடுபவருக்கு உகந்த பிரசாதம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிற் பூசைப் பொலிவும் திருவிழாச் சிறப்பும் கண்டுள்ளம் நெகிழ்ந்து வருபவர்களுக்கு இன்னும் ஒரு பிரசாதம் வழங்குகிறது நல்லை ஆதீனம். இந்தத் திருத்தொண்டு நல்லைக்குரு மணி காலந்தொட்டுத் தொடர்ந்து வருகின்றது.

ஆதீன மகா சந்நிதானத்தின் பேருபகாரச் சமய அறிவுணவு விருந்து பல்சுவையானது. ஆதின அமைப்பாளர், புராணிகர் பண்ணிசையாளர் இயலுரைஞர் என்று வெவ்வேறு வகையினரால் நல்லூர் விரதகாரர்களுக்குத் தேவாமிர்தம் இங்கு வழங்கப் படுகின்றது.

## சங்கீதப்பிரியன் சட்டத்தரணி சதா. சிறிநிவாசன்

கலி காலச் சூழல் காற்றிலே காலன் கையிற் சிக்கியவர்களிற் சட்டத்தரணி சதா. சிறிநிவாசனும் ஒருவர்

அரசவுயர் சேவையில் இறை அதிகாரியாக விருந்து ஒய்வு பெற்று சட்டதரணியாக விளங்கிய திரு. சதா. சிறிநிவாசன் முத்தமிழ் மோகங்கொண்டவர் சங்கீத வல்லுநர் சமய சமுக சேவையாளர்.

அரிய உயிர் - அகன்று விட்டது சாந்தி பெற இறைவனை வணங்குவோம்.

உ

## ஆவணியில் மூலமதில்
# எழுந்தருள்வள் துர்க்கை

கலைக ணாயகியே கருணைவார் கடலே
கானமே லாயெழு கனியே
மலைக ணாதனின் மகவருண் மடையே
வாணியே மாமறைத் தொனியே
அலைக ணுடுசடா முடியிறைத் தனமே
ஆதியே பூநடை யனமே
நிலைக ணயபரா பரைசிவ துர்க்கையே
நீதியே யாளுமெய் நிறைவே.

ஞாலம் தனிலுண்மை நட்பாகி நன்னினைவே
நவசற் சங்கமெழ நாத்திகத்தின்
காலம் கலியாய கன்றேடக் கன்னியளே
கருணை தந்தருளுங் காரணியே
ஆலம் அமுதுண்ட அன்பாளன் நரிமீது
பரியென் றற்புதங்கொள் ஆவணிநாள்
மூலம் சிவலிங்கம் முன்னாக அடியார்க்கு
முறைசெய் துர்க்கையெம் வாழ்முதலே.

தந்திரமா விந்தையென அந்தமல மழுந்து
சந்ததியிற் சாருமுயிர் வேத னைக்கெனு
எந்தரமா யிந்தவுடல் வந்மையவெழுந்த
இந்திரிய காரியங்கள் நாணி வெட்கவே
மந்திரமா யந்தணர்தஞ் சிந்தையொளி மலர்ந்து
வந்தனைசெய் வாரிதய தாம ரைக்குளே
செந்திருவாய்ச் சந்திரவொண் பிம்பமெனச் சிவசக்தி
லிங்கவுரு மேவிவரு தேவி துர்க்கையே.

அன்று திருப் பெருந்துறைக்கு ருந்தமர நீழலாங்கு
அந்தணநல் லாசாரி யராக
நின்றசிவ மதொன்றெனமெய் நன்றுரைத்து வாதவூர்
நெஞ்சுறைந்து நாடாள்ப வராகும்
மன்றுதமிழ் அரசுபரி கண்டுகக்கப் பாகனாய்
வந்தநரி மீதேறும் விநோதம்
சென்றிரவி பரவுநல்ல ஆவணி மூலமார்
சிங்கதுர்க்கை தேசாளும் விழாவே.

செந்தொடைபொற் றுமரையி லக்குமியும் துர்க்கை
தேசுநிறை சிலவெண்சர ஸ்வதியும் துர்க்கை
முந்துமலை மாமகளு மையவளும் துர்க்கை
மோகனதெய் வானைவள்ளி சத்திகளும் துர்க்கை
பைந்தமிழிங் காளவெழும் பண்ணவளும் துர்க்கை
பாரிலுள யாவையுமே பற்றுபவள் துர்க்கை
அந்தமில்சி வானந்த லிங்கவடி வில்நல்லன் பர்க்கிங்
காவணியில் மூலமதில் எழுந்தருள்வள் துர்க்கை.

– 'பரம் சோதி' –

### ஆவணிமூல அபிஷேகம்

மட்டுவில் மஹா முத்து மாரி அம்பாள் ஆவணிமூல அபிஷேக ஆராதனை 23-8-1988 செவ்வாய்க் கிழமை தர்மபரிபாலகர் பொன். தாமோதரம்பிள்ளை அவர்களின் நினைவு

### ஆவணிமூலம்..........

3 ஆம் பக்கத்து வளர்ச்சி

அநாதராய் மகளிர் இல்லத்துச் சிறுமிகள் அநாதியாயுள்ள அன்னைக்கு அருந்தொண்டாற்றுகின்றனர்.

வேறென்ன வேண்டும் வேத வல்லிக்கு.

**தூய துர்க்கா தொண்டர்**

பூரநாள் பூமகள் துர்க்கைக்குப் பொருத்தமான வேளை.

மூலமலங்களைந்தடியார்களை முன்னேற்றுதற்குத் துர்க்கை அன்னை எழுந்தருள மூலநாள் விசேடமானது.

சிவன்பாலன்பு பூண்ட துர்க்கா தொண்டன் ஒருவர் மௌனவிரதம் வாரம் ஒருநாள் இருந்த படி பணிபுரிவதும் ஓர் சிறப்பு.

### ஆலய சீலம் அமையில்...

வேறுவழி ஒன்றுமே இல்லை. மானுட வாழ்வு ஈனநிலைமைக்குத் தாழ்வடைந்து விட்டது. ஆறறிவுள்ளவர்கள் மானுடர் என்ற கொள்கை பொய்த்துவிட்டது. ஏனைய உயிரினங்களினும் கீழ்ப்படிக்கு மானுடம் தன்னைத் தானே தள்ளிக்கொண்டு செல்கின்றது. இக்கூற்றினை உறுதிப் படுத்த வேண்டியதில்லை. உண்மையான கண்கூடான வெளிப்படையான அலங்கோலத்தில் நாம் அனைவரும் காட்சிகொடுக்கின்றோம்.

ஒரு நாழிகைப் பொழுதில் அனைத்துலகிலும்வன்செயல்வழியாக நிகழ்கின்ற கோரக்கொலைகள் ஆயிரக்கணக்கிலல்ல, இலட்சம் என்று கணிக்கப்படத்தக்கதாகப்புரியப்படுகின்றன. விலங்கினமோ வேறெந்த இனமோ இவ்வளவு தொகையாக அழிக்கப்படவில்லை.

அழிக்குந்தொழிலை தொழிலாகக் கொண்டு படுபாவியாகத் தலைவிரித்தாடுகின்றான் மனிதன். வானொலி வழிவரும் உலகச் செய்திகள் இதை ஒவ்வொரு நாளும் கூறிய வண்ணம் இருக்கின்றது.

ஈரான் ஈராக் போரிலே இறந்தவர்களின் தொகையை உள்ளபடி கணக்கிட்டு வெளிப்படுத்தினால் இதரநாடுகளில் நிலவும் கொலை நிகழ்ச்சிகளைப் பற்றி அநுமானித்து விடலாம். ஆனால் அரசியற்பொறுப்புடையவர்கள் எவருமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை (வளரும்)

## "சாதனையும் போதனையும்"



பத்தர்: "போதனை பண்ணுகிறவர்களுட் சிலர்... தாம் சாதனையும்பண்ண வேணும் என சிந்திக்கிறாரில்லை! சிந்தித்தால்...?

சித்தர்: "சிந்திப்பதைச் சிந்தித்தால் நமக்கோ — நாட்டுக்கோ என்ன குறையப்பனே? 'சாதனையோ - போதனையோ இன்று வேண்டும் ... ?

– "நாயன்டார் - நாதன்"

## அரவமும் - கருடனும்
## அருகிருக்க ஆயத்தம்!

போராடி வீணாய்ப் பொருளுயிர் போக்கிய
ஈரானும் ஈராக்கும் இப்பொழுது — நேராகச்
சிந்திக்கக் கண்திறந்தார் சித்திர புத்திரனார்
சிந்திக்க அங்கிறந்தார் சீர்.

"இறைஒளி"

### திருமுறை ஓதுவதில்,...

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

திலே அம்பாள் கோயில்களில் எங்கும் ஆண்டுவிழாக்களோ, அமைய விழாக்களோ ஆடித் திங்கள் நிகழ்வது வழக்கம்.

துர்க்கா திருத்தலத்திலே இவ் விழா எழில்மிகு நிகழ்ச்சியாக அமைவது ஒருநியமம்.

அவ்வாறு ஆடி 30 ம் நாள் இப்பெருவிழா அலங்கார அணியாக ஆயிரக்கணக்கான அடியார்கள் தரிசிக்கச் சிறப்பாக நிகழ்ந்தது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 4̈0 ஆம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப் பிரகாச அச்சகத்தில் 1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் (19 — 08 — 1988) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர் நம. சிவப்பிரகாசம்

தொலைபேசி இல: 22356